ஶ்ரீ:

ஶ்ரீமதே ராமாநுஜாய நம:

ஶ்ரீமதே நிக$_3$மாந்தமஹாதே$_3$ஶிகாய நம:

நம்மாழ்வார் அருளிச்செய்த திருவாய்மொழி

# 7.6 – பாமருமூவுலகும்

*This document has been prepared by*

*Sunder Kidāmbi*

*with the blessings of*

ஶ்ரீ ரங்க$_3$ராமாநுஜ மஹாதே$_3$ஶிகன்

*His Holiness śrīmad āṇḍavan śrīraṅgam*

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

ஸ்ரீமதே நிக₃மாந்தமஹாதே₃ஶிகாய நம:

# 7.6 – பாமருமூவுலகும்

‡ பா மரு மூ உலகும் படைத்த ⋆
பற்பநாபா ஓ ⋆
பா மரு மூ உலகும் அளந்த ⋆
பற்ப பாதா ஓ ⋆
தாமரைக் கண்ணா ஓ ! ⋆
தனியேன் தனி ஆளா ஓ ⋆
தாமரைக் கையா ஓ ! ⋆
உன்னை என்று கொல் சேர்வதுவே ‖ **7.6.1** ‖

என்று கொல் சேர்வதந்தோ ⋆
அரன் நான்முகன் ஏத்தும் ⋆
செய்ய நின் திருப் பாதத்தை யான் ⋆
நிலம் நீர் எரி கால் ⋆
விண் உயிர் என்றிவை தாம் முதலா முற்றுமாய் ⋆
நின்ற எந்தாய் ஓ ⋆
குன்றெடுத்தா நிரை மேய்த்து ⋆
அவை காத்த எம் கூத்தா ஓ ‖ **7.6.2** ‖

காத்த எம் கூத்தா ஓ ! ⋆
மலை ஏந்திக் கல்மாரி தன்னை ⋆
பூத் தண் துழாய் முடியாய் ! ⋆
புனை கொன்றை அஞ்செம் சடையாய் ⋆
வாய்த்த என் நான்முகனே ! ⋆

வந்தென் ஆர் உயிர் நீ ஆனால் ⋆
ஏத்தரும் கீர்த்தியினாய் ! ⋆
உன்னை எங்குத் தலைப் பெய்வனே ‖ **7.6.3** ‖

எங்குத் தலைப் பெய்வன் நான் ⋆
எழில் மூ உலகும் நீயே ⋆
அங்குயர் முக்கண் பிரான் ⋆
பிரம பெருமான் அவன் நீ ⋆
வெம் கதிர் வச்சிரக் கை ⋆
இந்திரன் முதலாத் தெய்வம் நீ ⋆
கொங்கலர் தண்ணம் துழாய் முடி ⋆
என்னுடைக் கோவலனே ! ‖ **7.6.4** ‖

என்னுடைக் கோவலனே ! ⋆
என் பொல்லாக் கரு மாணிக்கமே ⋆
உன்னுடை உந்தி மலர் ⋆
உலகம் அவை மூன்றும் பரந்து ⋆
உன்னுடைச் சோதி வெள்ளத்து ⋆
அகம் பால் உன்னைக் கண்டு கொண்டிட்டு ⋆
என்னுடை ஆர் உயிரார் ⋆
எங்ஙனே கொல் வந்தெய்துவரே ‖ **7.6.5** ‖

வந்தெய்தும் ஆறறியேன் ⋆
மல்கு நீலச் சுடர் தழைப்ப ⋆
செம் சுடர்ச் சோதிகள் பூத்து ⋆
ஒரு மாணிக்கம் சேர்வது போல் ⋆
அந்தர மேல் செம் பட்டோடு ⋆
அடி உந்தி கை மார்வு கண் வாய் ⋆

செம் சுடர்ச் சோதி விட உறை ⋆
என் திருமார்பனையே ॥ **7.6.6** ॥

என் திருமார்பன் தன்னை ⋆
என் மலைமகள் கூறன் தன்னை ⋆
என்றும் என் நா மகளை ⋆
அகம் பால் கொண்ட நான்முகனை ⋆
நின்ற சசிபதியை ⋆
நிலம் கீண்டெயில் மூன்றெரித்த ⋆
வென்று புலம் துரந்த ⋆
விசும்பாளியைக் காணேனோ ॥ **7.6.7** ॥

ஆளியைக் காண் பரியாய் ⋆
அரி காண் நரியாய் ⋆
அரக்கர் ஊளை இட்டன்றிலங்கை கடந்து ⋆
பிலம் புக்கொளிப்ப ⋆
மீளியம் புள்ளைக் கடாய் ⋆
விறல் மாலியைக் கொன்று ⋆
பின்னும் ஆள் உயர் குன்றங்கள் செய்து ⋆
அடர்த்தானையும் காண்டும் கொலோ ॥ **7.6.8** ॥

காண்டும் கொலோ நெஞ்சமே ! ⋆
கடிய வினையே முயலும் ⋆
ஆண் திறல் மீளி மொய்ம்பின் ⋆
அரக்கன் குலத்தைத் தடிந்து ⋆
மீண்டும் அவன் தம்பிக்கே ⋆
விரி நீர் இலங்கை அருளி ⋆

ஆண்டு தன் சோதி புக்க ⋆
அமரர் அரி ஏற்றினையே ‖ **7.6.9** ‖

ஏற்றரும் வைகுந்தத்தை ⋆
அருளும் நமக்கு ⋆
ஆயர் குலத்தீற்றிளம் பிள்ளை ஒன்றாய்ப் புக்கு ⋆
மாயங்களே இயற்றி ⋆
கூற்றியல் கஞ்சனைக் கொன்று ⋆
ஐவர்க்காய் கொடும் சேனை தடிந்து ⋆
ஆற்றல் மிக்கான் ⋆
பெரிய பரம் சோதி புக்க அரியே ‖ **7.6.10** ‖

‡ புக்க அரி உருவாய் ⋆
அவுணன் உடல் கீண்டுகந்த ⋆
சக்கரச் செல்வன் தன்னைக் ⋆
குருகூர்ச் சடகோபன் சொன்ன ⋆
மிக்க ஓர் ஆயிரத்துள் ⋆
இவை பத்தும் வல்லார் அவரை ⋆
தொக்குப் பல்லாண்டிசைத்துக் ⋆
கவரி செய்வர் ஏழையரே ‖ **7.6.11** ‖

அடிவரவு — பாமரு என்று காத்த எங்கு என்னுடை வந்து என் ஆளியை காண்டு ஏற்றரும் புக்க ஏழையர்

பாமருமூவுலகும் முற்றிற்று

நம்மாழ்வார் திருவடிகளே சரணம்